12.01.2024 எம்.சி.ஓ.பி. எண். 206/2015 எ.சா.1 பழனி

குறுக்கு விசாரணை

விபத்து 2015 ஆம் ஆண்டு நடந்தது. மாதம், தேதி நினைவில்லை. நான் வந்தவாசியிலிருந்து செய்யாறுக்கு வந்துகொண்டிருந்தேன். நான் இன்டிகா வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். அந்த வாகனத்தின் பதிவு எண். டி.என். 05 ஏசி 2722 ஆகும். மேற்சொன்ன வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்ததா என்றால் தெரியாது. என் சொந்த ஊருக்கு வருவதற்காக வண்டியை நண்பரிடம் வாங்கிக்கொண்டுவந்தேன். விபத்து நடந்தபோது இரவு 8.00 மணி இருந்திருக்கும். விபத்து நடந்த இடத்தில் வேகத்தடை இருந்தது. நான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வேகத்தடை இருப்பதை பார்க்காமல் வந்து மனுதாரர்களை இடித்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கையை பொருண்மை தவறு என்று முடித்துவிட்டார்கள் என்பதற்கு எந்த ஆவணத்தையும் நான் சமர்பிக்கவில்லை என்று சொன்னால் முதல் விசாரணை உறுதிக்கூற்றில் பொருண்மை தவறு என்று நான் தான் சொல்லியுள்ளேன். பொருண்மை தவறு என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் மனுதாரர்கள் பின்னால் வந்து இடித்ததால் மனுதாரர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. வாகனத்திற்கு காப்பீடு இல்லாததால் மனுதாரர்களுக்கு நானும், 2ம் எதிர்மனுதாரரும் இழப்பீடு வழங்க கடமைபட்டவர்கள் என்றால் சரியல்ல. முதல் விசாரணை உறுதிக்கூற்றில் கூறியுள்ள சங்கதிகளை வழக்கிற்காக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.